
தேவ
நதியினால்
நீர்ப்பாய்ச்சுகிறீர்

65 சங்கீதம்

தேவ நதியினால் நீர்ப்பாய்ச்சுகிறீர்
பூமியை விசாரித்து செழிப்பாக்குகிறீர்
தானியத்தையெல்லாம் விளைவிக்கிறீர்
பயிர்களை ஆசீர்வதிக்கிறீர்
எல்லாமே உம்மாலே எல்லாமே உம்மாலே
உம்மாலே எல்லாமே உருவானதே எங்கள் கர்த்தரே

வருஷங்களை நன்மையால் முடிசூட்டுகிறீர்
உமது பாதைகள் நெய்யாய் பொழிகிறது
வனாந்தர தாபரங்களிலும் பொழிகின்றீர்
மேடுகளைச் சுற்றிலும் பூரிப்பாக்குகிறீர் (எல்லாமே)

மேய்ச்சலுள்ள வெளிகளில் ஆடுகளை நிறைத்தீர்
பள்ளத்தாக்கை தானியத்தால் மூடியிருக்கச் செய்தீர்
படைச்சால்களுக்குத் தண்ணீரை இறைத்தீர்
அதை மழைகளால் கரையப் பண்ணினீர் (எல்லாமே)

சமுத்திரங்களின் இரைச்சலை அமர்த்துகிறீர்
அலைகளின் இரைச்சலையும் அமர்த்துகிறீர்
ஜனங்களின் அமளியை அமர்த்துகிறீர்
காலையையும் மாலையையும் களிகூரப்பண்ணுகிறீர்
(எல்லாமே)

பயங்கரமான காரியங்களைச் செய்கின்றீர்
எங்களுக்கு நீதியுள்ள உத்தரவை அருளுகிறீர்
எல்லாரும் நம்பும் நம்பிக்கையான எங்கள் இரட்சகரே
உமது வீட்டின் நன்மையால் திருப்தியாவோம் (எல்லாமே)

பாக்கியமான யாவரும் உம்மிடத்தில் சேருவார்கள்
ஜெபத்தைக் கேட்கிறவரே உம்மைத் துதிப்பேன்
அக்கிரமத்தை என்மேலிருந்து [illegible] எடுத்திடும்

Sep '07	S	S	M	T	W	T	F	S	S	M	T	W	T	F	S	S	M	T	W	T	F	S	S	M	T	W	T	F	S	S
	1	2	3	4	5	6	7	8	9	10	11	12	13	14	15	16	17	18	19	20	21	22	23	24	25	26	27	28	29	30

தேவனே என் பாவங்களை நிவர்த்தியாக்கிடும். (எல்லாமே)

